

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

வருடாந்த அறிக்கை

2019

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
முகவரி: 46-48, கொட்டா வீதி
கொழும்பு 08

அட்டவணை

		பக்க இல.
ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்		3
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு உறுப்பினர்கள்		4
ஆணையாளரின் செய்தி		5-6
1.	**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**	
1.1	அறிமுகவுரை	7
1.2	நோக்கம்	7
1.3	பணி	7
1.4	குறிக்கோள்கள்	7
1.5	ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்	7-8
1.6	அமைப்பாண்மை கட்டமைப்பு	09
1.7	மனித வளங்கள்	10
2.	**2019 ஆம் ஆண்டில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் அமுல்படுத்துகை செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும்**	
2.1	"சஹசக் நிமவும் 2019" தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சி	11-15
2.2	புதிது கண்டுபிடிக்கும் திறனை ஊக்குவிக்கும் முகமாக புத்தாக்குனர் கழகங்களை தாபித்தல்	16
2.3	தேசிய புத்தாக்குனர் தினம்	17
2.4	நிபுணத்துவம் மிகு புத்தாக்க மதிப்பீட்டு குழாம்	17
2.5	புத்தாக்கங்களினை வெளிப்படுத்துவதற்கான சர்வதேச மாநாடு - "புத்தாக்கமும் அதன் தாக்கமும் - FITI 2019"	18
2.6	"இலங்கை புத்தாக்குனர்கள்" - புத்தாக்கங்களை பிரபல்யபடுத்துவதற்கு YouTube இன்	19
2.7	தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அதிபுலமை சொத்து உரிமைகளை பாதுகாப்பதற்கு வழங்கப்படும் சேவைகள்.	19-20
2.8	புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான IAFM-SL கருத்திட்டம்.	20-21
2.9	புத்தாக்கங்களிற்கான வர்த்தகமயப்படுத்துகை அடிப்படையினை தாபிப்பதற்கான "நவ நிபயும் திரிய" (Nawa Nipayum Diriya)	21
2.10	புத்தாக்குனர்களுக்கு தொழினுட்பவியல் உதவிகளினை வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்ட தொழினுட்பவியல் அடைக்காப்பக நிலையங்கள்	22
2.11	சர்வதேச புத்தாக்க போட்டிகளில் நுழைவு	22-30
2.12	புத்தாக்குனர் முன்னரங்கு	31
2.13	புத்தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டமும் வழங்கப்பட்ட சேவைகளும்	31-32
2.14	புத்தாக்குனர்களுக்குரித்தான சேவைகள்	32-33
2.15	ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளத்தில் பெறக்கூடியதாக இருக்கும் விசேட சேவைகள்	33
2.16	மனித வள அபிவிருத்தி	34-35
2.17	நிதியியல் மூலதனத்தின் முன்னேற்றம்	35
2.18	இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு உரித்தான தனித்துவமான சொத்துக்கள்	36
3.	**நிதியியல் கூற்றுக்கள்**	37-55

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

2019.01.01 இலிருந்து 2019.04.01 வரையில்

திருமதி.டி.நந்தனி சமரவிக்ரம
[மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)
விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
ஆணையாளர்(பதில் கடமையாற்றல்)

திருமதி.எல்.சுரேகா எச்.ஹேவாகே
[சிரேட்ட உதவி செயலாளர் (நிர்வாகம்
விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
உதவி ஆணையாளர்(பதில் கடமையாற்றல்)

திருமதி.எ.எல்..எஸ்.நசீமா
[பணிப்பாளர் (திட்டமிடல்) விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
உதவி ஆணையாளர்(பதில் கடமையாற்றல்)

திரு.எ.வி. ஜனதர
திறைசேரி பிரதிநிதி

2019.04.02 இலிருந்து 2019.12.05 வரையில்

பேரா.ரங்கிகா உமேஷ் ஹல்வதுர
ஆணையாளர்

பேரா.எம்.டி.டயல் பிரேமகுமார டி கொஸ்டா
உதவி ஆணையாளர்

திரு.யசாஸ் சந்திரா டி சில்வா, சட்டத்தரணி
உதவி ஆணையாளர்

திரு.எ.வி.ஜனதர
திறைசேரி பிரதிநிதி

2019.12.06 இலிருந்து 2019.12.31 வரையில்

திருமதி.டபிள்யு.எ.நிமாலி குலதுங்க
[பணிப்பாளர் (திட்டமிடல்) விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
ஆணையாளர்(பதில் கடமையாற்றல்)

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு உறுப்பினர்கள்

2019.01.01 இலிருந்து 2019.04.01 வரையில்

திருமதி.எல்.சுரேகா எச்.ஹேவாகே
[சிரேட்ட உதவி செயலாளர் (நிர்வாகம் - விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
உதவி ஆணையாளர்(பதில் கடமையாற்றல்)

திருமதி.எ.எல்..எஸ்.நசீமா
[பணிப்பாளர் (திட்டமிடல்) விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
உதவி ஆணையாளர்(பதில் கடமையாற்றல்)

திரு.எ.வி.ஜனதர
திறைசேரி பிரதிநிதி

திருமதி.சி.பி.ஆர்.பண்டார
உள்ளக கணக்காய்வாளர் - விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

திருமதி.டபிள்யு.பி.எல்.ஆர்.எஸ்.பெரெரா
பிரதிநிதி, கணக்காய்வாளர் நாயக திணைக்களம்

2019.04.02 இலிருந்து 2019.12.05 வரையில்

பேரா.எம்.டி.டயல் பிரேமகுமார டி கொஸ்டா
உதவி ஆணையாளர்

திரு.யசாஸ் சந்திரா டி சில்வா, சட்டத்தரணி
உதவி ஆணையாளர்

திரு.எ.வி.ஜனதர
திறைசேரி பிரதிநிதி

திருமதி.சி.பி.ஆர்.பண்டார
உள்ளக கணக்காய்வாளர்- விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

திருமதி.எச்.அனுருந்திகா
உள்ளக கணக்காய்வாளர் - விஞ்ஞான, தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சு அமைச்சு

திருமதி.டபிள்யு.பி.எல்.ஆர்.எஸ்.பெரெரா
பிரதிநிதி, கணக்காய்வாளர் நாயக திணைக்களம்

ஆணையாளரின் செய்தி



பேராசிரியர் ஆர்.யு.ஹல்வதுர
ஆணையாளர்
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் வலுவூட்டப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோளானது புத்தாக்கம் மற்றும் புதுக்கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் இலங்கை வாழ் பிரசைகளினை ஊக்குவித்தல், அவர்களுக்கு தொழினுட்பவியல் நிதியியல் மற்றும் சட்ட ரீதியிலான ஆலோசனைகளினை வழங்கல் என்பனவாகும்.

இதன் காரணமாக, ஆணைக்குழுவானது ஏற்கனவே பல நிகழ்ச்சித்திட்டங்களினை தேசிய புத்தாக்குனர்கள் நிமித்தம் முறைவடிவமாக்கம் செய்துள்ளது இவற்றுடன் புத்தாக்குனர்கள் அவர்களது புத்தாக்கங்களினை மேலும் விருத்தி செய்வதற்கு ஊக்குவிக்கும் வகையில் அவர்களது புத்தாக்கங்களினை சந்தைப்படுத்துவதற்கு தேவையான உதவிகளினை வழங்குவதற்கு பொருத்தமுடைய வகையில் பல நிகழ்ச்சித்திடங்களினை வடிவமைத்து இருப்பதோடு இது நாட்டின் பொருளாதார மேம்படுத்துகைக்கு குறிப்பிட்டு சொல்லும்படியான பங்களிப்பினை ஏற்படுத்தவல்லது.

புத்தாக்கமொன்று சிறந்த முறையில் பிலபல்யப்படுதல் செய்யப்பட்டாலேயே அது மக்கள் ஆர்வத்தை / கேள்வியினை பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமையும். ஆதலினால் புத்தாக்கமானது ஒழுங்கான முறையில் பிரபல்யப்படுத்துகை செய்யப்படலானது ஒரு கட்டாய தேவைப்பாடாகும் இந்த நோக்கினை நனவாக்குவதற்கு ஆணைக்குழுவினால் அமுல்படுத்துகை செய்யப்பட்டு வரும் பல நிகழ்ச்சித்திட்டங்களிற்குள் "சஹசக் நிமவும்" மிகவும் முக்கியமானதொன்றாக அமைகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்த போதிலும் இந்த வருடமே இது சர்வதேச மட்டத்திலான புத்தாக்க மற்றும் புதுக் கண்டுபிடிப்பு நிகழ்ச்சித்திட்டமாகியது. சர்வதேச மட்டத்திலான அனுபவத்தை நாட்டிற்குள்ளேயே பெற்றுக் கொள்வதற்கு எமது நாட்டு புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட மிகச் சிறந்த வாய்ப்பே சஹசக் நிமவும் ஆகும்.

இதைவிட புத்தாக்குனர்களினை மின்னியல் மற்றும் அச்சிடல் ஊடகங்களினூடாகவும் பிரபல்யப்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச புத்தாக்குனர்கள் தமது புத்தாக்கங்களிற்கான வியாபார வாய்ப்புகள் பற்றிய விபரங்களினை அறிந்து கொள்ள இலங்கை புத்தாக்குனர்கள் எனும் பெயரில் யு ரியூப் செனல் ஒன்றினை முறைவடிவமாக்கம் செய்யப்பட்டிருப்பதுடன் புத்தாக்கங்கள் பற்றிய ஆர்வமுடையவர்கள் எவரையும் இது கவரக்கூடியதாகவுள்ளது.

புத்தாக்கங்களினை மேம்படுத்துகை செய்வதில் ஆணைக்குழுவின் வலைத்தளம் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது தற்போது இந்த வலைத்தளமானது புத்தாக்குனர் மற்றும் முதலீட்டாளர்களிடையே உறவினை ஏற்படுத்தக் கூடிய வகையில் மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதனுடன் ஆணைக்குழுவானது புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற புத்தாக்குனர் சங்கங்களினை தாபிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன 2019 ஆம் ஆண்டில் மிகவும் வினைத்திறனுடன் அமுல்படுத்துகை செய்யப்பட்டுள்ளது. இது எதிர்கால இலங்கை வாழ் பிரசைகளிடையே மிகச் சிறந்த வகையில் புத்தாக்க கலாச்சாரமொன்றை உருவாக்குவதற்கு ஏதுவாக அமைகின்றது.

உத்தேச புத்தாக்குனர்களுக்கு அவர்களது புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு உதவும் வகையில் ITFM – SL (இலங்கைக்கான புத்தாக்குனர் விரைவுபடுத்துகை நிதியீட்டு பொறிமுறை) எனும் பெயரிலும் "நல நிபயும் டெரிய" எனும் பெயரிலும் இரு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துகை செய்யப்பட்டுள்ளது. இந்த செயன்முறையின் கீழ் புத்தாக்குனர்களிடமிருந்து அவர்களது புத்தாக்கங்கள் தொடர்பில் விண்ணப்பங்களிற்கு அழைப்பு விடுக்கப்படும் அப் புத்தாக்கங்களிற்குள் தகைமையுடைய புத்தாக்கங்களாவன திறன்மிகு நிபுணத்துவ குழாமினால் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் புத்தாக்கங்களிற்கு நிதி மற்றும் தொழினுட்ப ரீதியிலான உதவிகள் வழங்கப்படும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவும் தொழினுட்பவியல் அடைகாப்பக நிலையங்களினை தாபிப்பதனூடாக அக புத்தாக்கங்களிற்கு அவர்களுடைய புத்தாக்கங்களிற்கு தேவைப்படக்கூடிய தொழினுட்ப உதவிகளினை வழங்குவதற்கான நடவடிக்கைகளினை எடுத்தல்.

புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாக்கங்கள் தொடர்பில் அதி புலமைச் சொத்து (ஆக்கவுரிமை) உரிமையினை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தல் தொடர்பில் உரிய வழிகாட்டல்களினை வழங்குவதற்காக ஆணைக்குழுவானது விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுல்படுத்துகை செய்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது அவர்களுடைய புத்தாக்கங்களிற்கு தேசிய மற்றும் சர்வதேச ஆக்கவுரிமையினை பெற்றுக் கொள்வதற்கு ஆதரவாக இருப்பதுடன் இந்த ஆக்கவுரிமையை பெற்றுக் கொள்ளலானது புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாக்கங்களிற்கான காப்பாக அமையும்.

அதி புலமைச் சொத்து உரிமையினை பெற்றுக் கொண்ட புத்தாக்குனர்களுக்கு ஒவ்வொரு வருடமும் சனாதிபதி விருதுகள் வழங்கப்படுகின்றது இந்த புத்தாக்கங்களாவன அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்ட நிபுணத்துவமும் திறனும் மிகுந்த விசேட குழுவினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

புத்தாக்குனர்களினால் முகம் கொடுக்கப்படுகின்ற பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட இன்னொரு நிகழ்ச்சித்திட்டமே புத்தாக்குனர் முன்னரங்கு ஆகும் இதை விட புத்தாக்குனர்களின் செயலூட்டற்றிறனை அறிமுகப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்களினை முன்னெடுத்தல், சர்வதேச மட்டத்தில் இடம் பெறும் போட்டிகளுக்கு அவர்களினை நெறிப்படுத்தல், ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி ஆசிய புத்தாக்குனர் தினத்தை கொண்டாடல், புத்தாக்குனர்களுக்கு அடையாள அட்டை வழங்கல் மற்றும் புத்தாக்குனர்களுக்கு விழிப்புணர்ச்சி திட்டங்களினை நடாத்துதல் போன்ற இதரபல சேவைகள் இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவினால் ஆற்றப்படுகின்றது.

ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் சகல முயற்சிகளிலும் தமது மிகச் சிறந்த ஆதரவினை வழங்கிய நிறுவகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் நிறுவகத்தின் ஒவ்வொரு முயற்சிகளிலும் வழிகாட்டல்களினை வழங்கிய சபை பணிப்பாளர்களுக்கும் எனது பாராட்டுக்களினை தெரிவித்து கொள்கின்றேன்.

அத்துடன் தேசியத்திற்கு மேலும் பெருமை சேர்க்க கூடிய வகையில் இலங்கை மக்களிடையே புதிது கண்டு பிடிக்கும் கலாச்சாரத்தை புகுத்தல் வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தன் செயற்பாடுகளினை முன்னெடுக்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் இந்த எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் முகமாக அமுல்படுத்துகை செய்யும் ஒவ்வொரு திட்டத்திற்கும் தமது ஆதரவினை வழங்கும் உங்களிற்கு எனது மனமார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

1.1 அறிமுகவுரை

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது (SLIC), தேசத்தின் புத்தாக்கற்றிக்கு ஆதரவு வழங்குவதுடன் ஊக்குவிப்பு செய்தலினை தனது பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தற்போது ஆணைக்குழுவானது விஞ்ஞான தொழினுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு அகப்பாட்டெல்லைக்குள் செயற்படுகின்றது.

1.2 நோக்கம்

“Nawa Nipayum Mawana Deyak – Yasa Isurin Pirunu Hetak”
(புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் புத்தாக்கத்தினூடாக சுபீட்சத்தை காணல்.)

1.3 பணி

“தேசத்திற்கு புத்தாக்க செயற்றினை கொண்டுவருவதில் தலைச்சிறந்த உந்து விசையாளராக இருத்தல்.கருத்துக்களை செயல்முறை சார் பிரயோகங்களில் மாற்றீடு செய்வதற்கு துணைமை செய்யும் செயன்முறையினது முன்னோடியாக இருத்தல்.”

1.4 குறிக்கோள்கள்

1.4.1 இலங்கை பிரஜைகளை புத்தாக்கம் மற்றும் புதுக்கண்டுபிடிப்புகளை செய்வதற்கு ஊக்குவித்தல்

1.4.2 புத்தாக்குனர்களுக்கு, தொழினுட்பவியல் உதவி, நிதியுதவி மற்றும் சட்ட உதவிகளை வழங்கல்.

1.4.3 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் குறித்துரைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகளையும் முன்னெடுத்தல்.

1.4.4 மேற்கூறப்பட்ட சகல குறிக்கோள்களையும் சாதிப்பதற்கு தேவையான சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்தல்.

1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

(அ) புத்தாக்குனர் புத்தாக்கங்களை காப்புரிமை வழங்கப்படுதலிற்கு ஏற்புடையதா என உறுதி செய்து கொள்வதற்கு அவர்களின் புத்தாக்கங்களை பரிசலித்து அவர்களுக்கு தொழினுட்பவியல் உதவிகளை வழங்கல் மற்றும் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புத்தாக்குனர்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்களை தயாரிக்க உதவி செய்தல்;

(ஆ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற காப்புரிமை பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களையும் மற்றும் காப்புரிமை பெறப்படாது நிலுவையாக இருக்கும் புத்தாக்கங்களையும் விருத்தி செய்வதற்கு, நேர்த்தியாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கல்;

(இ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் புத்தாக்குனர்களுக்கு, காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவை சூறையாடப்படாது பாதுகாக்கபடுவதற்கும் சட்ட ரீதியாக உதவியாக இருத்தல்;

(ஈ) இலங்கைக்கு பயனளிக்ககூடிய புத்தாக்கங்களை, அப்புத்தாக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான சாத்தியத்தன்மை என்பனவற்றை கருத்திற்கொண்ட பின்பு அவற்றை மேலும் உற்பத்தி செய்வதற்காக தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு அரசின் கீழடங்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவர்களுக்கு நீண்ட கால கடன் வழங்க பரிந்துரைத்தல்;

(உ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களுக்கான சந்தையினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருத்தல்;

(ஊ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களின் பெறுமதியினை அவர்களுக்கு அறியச்செய்யும் வகையில் வருடாந்தம் கண்காட்சிகளை "புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது" எனும் தலைப்பில் நடாத்தி அந்த கண்காட்சி விழாவின் போது புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் பணப்பரிசினையும் பதக்கங்களையும் வழங்குதல் என்பதுடன் இந்த விழாவின் போது தெரிவு செய்யப்படும் புத்தாக்கங்களாவன விவசாயம், இரசாயணவியல், மருத்துவம், தேசிய பாதுகாப்பு, மருந்தகவியல், பௌதிகவியல், பாதுகாப்பு மற்றும் நலன்புரி பொதுப்பணிகள், போக்குவரத்து மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும். அத்துடன் இந்த விருதுகளாவன இலங்கை சார் புத்தாக்குனர் என்றவகையில் முக்கியத்துவம் கொடுக்கப்படாது இலங்கையிலுள்ள சகல புத்தாக்குனர்களும் கருத்தில் கொள்ளப்பட்டு வழங்கப்படும்;

(எ) ஒரு பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் சோதனை நிலையத்தை தாபித்தல். அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தமது புத்தாக்கங்களை மேலும் சீர்படுத்திக் கொள்வதற்கு இந்த ஆராய்ச்சி கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சோதனை சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்;

(ஏ) இலங்கை வாழ் மக்களிடையே புதிது புனைதல் மற்றும் படைப்பாக்கற்றிறன் என்பனவற்றை மேம்படுத்தவும் மற்றும் வருடாந்தம் இடம்பெறும் "ஆக்கற்றிறன் மிகு ஆராய்ச்சி போட்டியில்" "புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி விருது வைபத்தின்" நடுவர்களால் மேலே பந்தி (ஊ) வில் கூறப்பட்டதும் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்துடன் தொடர்புடைய துறைகளில் புதிய படைப்புக்களை படைத்தலில் துணையாக இருப்பதற்கும் மற்றும் அதில் வெற்வியாளர்களை தெரிவுசெய்து பணப்பரிசு மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கும்;


(ஐ) புத்தாக்கம், ஆராய்ச்சிகள் மற்றும் பொதுவான விஞ்ஞானம் என்பவற்றில் தகவல்களை பிரிசுரித்தலும் பரப்புவதற்கு;

(ஒ) புத்தாக்குனர்களிடையே கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு ஒரு ஒழுங்கு முறையில் மாதாந்தம் கூட்டத்தொடர்களை நடாத்துவதற்கு;

(ஓ) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுதல் அல்லது அத்தகைய போட்டிகளில் அவர்களை பங்குபெறச் செய்வதற்கு பரிந்துரைத்தல்; மற்றும்

(ஔ) இலங்கை வாழ் இளைஞர்களிடையே படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கு பள்ளிகூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கற்றிறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல்.

1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு



1.7 மனித வளங்கள

பதவி	அங்கீகரிக்கப்பட்ட தொழில்நிலைப் பிரிவு	2018 ஆம் ஆண்டிற்கான தொழில்நிலைப் பிரிவு	2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வெற்றிடங்கள்
பணிப்பாளர் (சிரேட்ட நிறைவேற்று அலுவலர்)	01	01	-
பிரதி பணிப்பாளர் /உதவி பணிப்பாளர் (நிதி)	02	02	-
பிரதி பணிப்பாளர் /உதவி பணிப்பாளர் (நிதி)	01	01	-
சட்ட அதிகாரி	01	-	01
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	03	03	-
நிர்வாக அலுவலர்	01	01	-
கணக்கியல் / நிதியியல் அலுவலர்	01	01	-
ஆராய்ச்சி உதவியாளர்	05	03	02
முகாமைத்துவ உதவியாளர்	07	06	01
சாரதிகள்	04	04	-
அலுவலக உதவியாளர்	02	02	-



2. 2018 ஆம் ஆண்டில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் அமுல்படுத்துகை செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும்

2.1 "சஹசக் நிமவும் 2019" தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சி

இலங்கை சார் புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புதுக்கண்டுப்பிடிப்புக்களை சமூகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு ஒரு பாதையினை வகுப்பதற்கும் மற்றும் அவர்களின் புதுக்கண்டுபிடிப்பு திறனை ஊக்குவிப்பதற்குமே "சஹசக் நிமவும்" எனப்படும் தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சி ஒழுங்கமைப்பு செய்யப்படுகின்றது.

"சஹசக் நிமவும" கண்காட்சியானது, 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த கண்காட்சியில் வெளிநாட்டினை சார்ந்தவர்களும் தமது புதுக்கண்டுபிடிப்புக்களையும் புத்தாக்கங்களையும் முன்னளிப்பு செய்து பங்குபற்றியதால் சர்வதேச கண்காட்சி எனும் தரத்திற்கு உட்பட்டது.இந்த கண்காட்சியின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதான குறிக்கோள்களுடன் வெளிநாட்டினை சார்ந்த முதலீட்டாளர் பங்குபற்றியதால் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்நிய செலாவணி இந்த கண்காட்சியினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக அநுகூலமொன்றாகும்.

தேசியம் மற்றும் சர்வதேசம் எனும் வகுதிக்குள் புத்தாக்கங்களை வகைப்படுத்தும் பொருட்டு அவற்றினை மதிப்பீடு செய்யும் "சஹசக் நிமவும்" கண்காட்சியானது இவ்வருடமும் "சஹசக் நிமவும் 2019" என முன்னெடுக்கப்பட்டது நாட்டின் சகல மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் திறமைமிக்க நிபுணத்துவ குழாமினால் முன்னெடுக்கப்பட்ட முதல்நிலை மதிப்பீடுகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட புதுக்கண்டுப்பிடிப்புக்களுக்கு, "சஹசக் நிமவும் 2019" இல் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

சம்மந்தப்பட்ட துறையில் சிறந்த அனுபவத்தை கொண்ட ஒரு விசேட மதிப்பீட்டு குழு சர்வதேச புத்தாக்கங்களை மதிப்பீட்டு செய்வதில் ஈடுபட்டது.இந்த முதலாவது சர்வதேச அணுகலின் கீழ் (07) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.இவற்றுள் தலா இரண்டு (02) விண்ணப்பங்கள் என்ற அடிப்படையில் மலேசியா, இந்தோனேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை ஆறு விண்ணப்பங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அதே வேளையில் ஒரு விண்ணப்பம் எகிப்திய நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தியமை ஒரு நாடென்ற வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த வெற்றியாக கருதப்பட்டது.

புத்தாக்குனர்கள் நான்கு பிரதான வகுதிகளின் கீழ் பங்குபெற அனுமதிக்கப்படுகின்றனர்.அந்த நான்கு பிரதான வகுதிகளாவன பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, வர்த்தகமயப்படுத்துகை மற்றும் திறந்த ஆகிய வகுதிகள் என்பதோடு இப்புத்தாக்கங்களாவன கீழ் குறிப்பிடப்பட்ட 14 துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்.

- பொதுப்பாதுகாப்பு, நலன்புரி மற்றும் தேசிய பாதுகாப்பு
- இரசாயனவியல்
- உணவு தொழில்னுட்பம்
- மருந்தும் மருந்தகவியலுமற்
- பாரம்பரிய மருத்துவம்
- பொது கைத்தொழில்துறை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்
- பௌதிகவியல்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம்
- விவசாயம்
- பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம்
- சக்தி
- சூழலை பாதுகாத்தல்
- போக்குவரத்து
- எந்திரவியல்



“சஹசக் நிமவும்” தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சி பங்குபெறும் புத்தாக்குனர்கள் அதீத
சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவருகின்றனர்.தமது திறமையின் மூலம் உருவாக்கப்பட்ட புதுக்கண்டுபிடிப்புக்களை காட்சிபடுத்துவதற்கு கிடைக்கப்பெற்ற ஒரு தளம், தமது புதுக்கண்டுபிடிப்புகளுக்கு
வர்த்தகமயப்படுத்தல் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு ஒரு பாதை மற்றும் சர்வதேச கண்காட்சியில் கலந்துக்கொண்டு விருதுகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு என்பன இக்கண்காட்சியின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆனகூலங்களாகும்.

“சஹசக் நிமவும் 2019” தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சியானது 2019 செப்டெம்பர் மாதம் 20-22 ஆம் திகதிவரை கொழும்பு 10 இலுள்ள இலங்கை கண்காட்சி மற்றும் கன்வென்ஷன் நிலையத்தில் 08ஆவது தடவையாக இடம்பெற்றது. சகல மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலந்துக்கொண்ட இலங்கை புத்தாக்குனர்களின் அவதானத்தை கவரும் வகையில் பல விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின போது, “சஹசக் நிமவும்” பற்றி மட்டுமன்றி அதிபுலமைச்சொத்துரிமைகள் (ஆக்கவுரிமைகள்), புத்தாக்கம்/புதுக்கண்டுபிடிப்பு தொடர்பிலும் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.இவ்வருடத்தில் மாகாணமட்டத்தில் 11 நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ் குறிப்பிட்டவாறு இடம்பெற்றன.

மாகாணம்	திகதி	இடம்
தெற்கு	2019 பெப்ரவரி 20,21,22	தொழினுட்பவியல் கல்லூரி, பெலியத்த சனச மாநாட்டு மண்டபம், நுபே தொழினுட்பவியல் கல்லூரி, காலி
சப்ரகமுவ	2019 பெப்ரவரி 26	தொழினுட்பவியல் கல்லூரி, இரத்தினபுரம்
வட மத்திய	2019 மார்ச் 01 & 02	தொழினுட்பவியல் கல்லூரி, அநுராதபுரம்
வட மேற்கு	2019 மார்ச் 06 &07	உயர் தொழினுட்ப நிலையம், குருநாகல்
மத்திய	2019 மார்ச் 12 &13	பேராதெனிய பல்கலைகழகம்
கிழக்கு	2019 மார்ச் 16 & 17	மஹஜன கல்லூரி, மட்டக்களப்பு
வடக்கு	2019 மார்ச் 19 & 20	யாழ்ப்பாணம் பல்கலைகழகம்
ஊவா	2019 மார்ச் 30 & 31	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழகம்
மேற்கு	2019 ஏப்ரல் 30 & 31	இலங்கை மன்றக் கல்லூரி

தேசிய மட்டத்தில் புத்தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கான பதின்நான்கு (14) மாகாணமட்டத்திலான மதிப்பீடுகள் வருமாறு இடம்பெற்றன.

மாகாணம்	திகதி	இடம்
வட மத்திய	2019 மே 09	தொழினுட்பவியல் கல்லூரி, அநுராதபுரம்
சப்ரகமுவ	2019 மே 11	தொழினுட்பவியல் கல்லூரி, இரத்தினபுரம்
கிழக்கு	2019 மே 25	மஹஜன கல்லூரி, மட்டக்களப்பு
வடக்கு	2019 மே 27	கனணி விஞ்ஞான திணைக்களம், யாழ்ப்பாணம் பல்கலைகழகம்
ஊவா	2019 ஜூன் 01	விலங்கியல் பீடம் , ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழகம்
தெற்கு	2019 ஜூன் 10 2019 ஜூன் 11 2019 ஜூன் 12	தொழினுட்பவியல் கல்லூரி, பெலியத்த பௌதிகவியல் பீடம், காலி பல்கலைகழகம், காலி விவசாயப்பீடம் , ருகுனு பல்கலைகழகம், காலி எந்திரவியல்பீடம் , ஹபுகல
மத்திய	2019 ஜூன் 15	விவசாயப்பீடம் , பேராதெனிய பல்கலைகழகம
வட மேற்கு	2019 ஜூன 18	உயர் தொழினுட்ப நிலையம், குருநாகல்
மேற்கு	2019 ஜூன் 20 2019 ஜூன் 21 2019 ஜூன் 22 2019 ஜூன் 23 2019 ஆகஸ்ட் 30	கயனோதய பாடசாலை, களுத்துற குருகுல கல்லூரி, கௌனி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, கொழும்பு 08 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, கொழும்பு 08



மாகாணமட்டத்தில் புத்தாக்கங்களை மதிப்பிடல்

பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்கள், வர்த்தகமயப்படுத்துகை மற்றும் திறந்த வகுதி ஆகிய பிரதான வகுதிகள் நான்கினையும் பிரதிநிதித்துவப்படுத்தி மேற்கூறப்பட்ட பதின்நான்கு (14) தொழினுட்பத்துறைகளின் கீழ் மொத்தமாக மூன்நூற்றிருபத்தேழு (327) புத்தாக்கங்களாவன "சஹசக் நிமவும்" புத்தாக்க கண்காட்சியிற்கு தகைமையுடையனவாய் தெரிவு செய்யப்பட்டன.

"சஹசக் நிமவும் 2019" சர்வதேச கண்காட்சியின் முக்கிய நிகழ்வுகள

















“சஹசக் நிமவும்” புதுக்கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க கண்காட்சியின் இறுதி நாளின் போது சகல வகுதிகளிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் வெண்கலபதக்கம் விருதுகளாக வழங்கப்பட்டன. இதைவிட அவர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசுகளும் வழங்கப்பட்டதுடன் மிகச்சிறந்தாக கருதப்படும் புத்தாக்கத்திற்கு “டேசிஸ்” வெற்றிக்கிண்ணமும், சான்றிதழும் மற்றும் பணப்பரிசும் வழங்கப்படுகின்றது. புத்தாக்கத்தில் புரட்சியை ஏற்படுத்தியதும் இராவணன் எனும் பெயரை கொண்ட அரசனால் “*Dadumonara*” உருவாக்கப்பட்டதினால் இவருக்கு “டேசிஸ்” எனப்படும் புனைப்பெயரும் உண்டு.அத்துடன் கடந்த காலத்தை நவீன காலத்துடன் இணைப்பதற்கான வரலாற்று ரீதியான நிகழ்வாக இது கருதப்படுகின்றது.

இதற்கமைவுற தேசிய மட்டத்து புத்தாக்குனர்களுக்கு 38 தங்கபதக்கங்களும், 36 வெள்ளிபதக்கங்களும் மற்றும் 32 வெண்கலபதக்கங்களும் வழங்கப்பட்டன.

சர்வதேச புத்தாக்கங்களுக்கு 05 தங்கபதக்கங்கள் மற்றும் 02 வெள்ளிபதக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்த விருது வழங்கும் வைபவத்தின் போது பள்ளிக்கூட வகுதியின் கீழ் விருதுகளை வென்றெடுத்த புத்தாக்குனர்கனை வழிநடத்திய ஆசிரியர்களுக்கு பணப்பொதி பரிசாக வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

“சஹசக் நிமவும்” கண்காட்சியில் விருதுகளை வெற்றிக்கொண்ட புத்தாக்குனர்களுக்கு எதிர்காலத்தில் சர்வதேச புத்தாக்க போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும்.

“சஹசக் நிமவும்” சர்வதேச புதுக்கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க கண்காட்சியினூடாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 900 அமேரிக்கன் டொலர் (கிட்டத்தட்ட ரூபாய் 150,000.00) இனை உழைக்கக்கூடியதாக இருந்தது.இந்நோக்கத்திற்காக மக்கள் வங்கியில் 204-4-021-3-1791066 எனும் இலக்கத்தை கொண்ட புதியதொரு வங்கி கணக்கு திறக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது.

2019 ஆம் ஆண்டில் “டேசிஸ்” வெற்றிக்கோப்பைக்குரிய வெற்றியாளர்கள



இடது பக்கத்திலிருந்து……

<u>பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவன வகுதி</u>
Safety, Easy and Advanced Handle System for Two and Three Wheels
(மெத்டசுன் சந்தமல்)

<u>திறந்த வகுதி</u>
Natural Water Purification System Inbuilt Water Well
(எச்.கே.எஸ்.பி.எரன்த)

<u>வர்த்தகமையப்படுத்துகை வகுதி</u>
Push Cart for Chest Drain Bottle
(ரன்ஜித் இராஜபக்ஷ)

<u>பாடசாலை வகுதி</u>
Thread Cluttering Preventive Zip

2.2 புதிது கண்டுபிடிக்கும் திறனை ஊக்குவிக்கும் முகமாக புத்தாக்குனர் கழகங்களை தாபித்தல்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் குறிக்கோள்களுக்குள் இலங்கை வாழ் பிரஜைகளின் புத்தாக்கங்களை ஊக்குவித்தலும் அதற்கு வழங்குதலும் எனும் செயற்பாடானது பிரதான குறிக்கோளாக கருதப்படுகின்றது.எதிர்கால சந்ததியினரிடையே புத்தாக்க கலாச்சாரத்தை மேம்படுத்தல் வேண்டும் என்ற இலக்குடன் பல நிகழ்ச்சித்திட்டங்களாவன ஆணைக்குழுவினால் அமுல்படுத்துகை செய்யப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவானது இளம் புத்தாக்குனர் கழகங்களை தாபிப்பதன் ஊடாக பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் மூன்றாம் நிலை கற்கைகள் நிறுவகத்தை சார்ந்க மாணவர்கள் ஆகியோரிடையே புத்தாக்க கலாச்சாரத்தை புகுத்துவதற்கு பல நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்கியுள்ளது.

2019 ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை மட்டத்து இளம் புத்தாக்குனர் கழகங்கள் 111 ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்டதுடன் ஏற்கனவே இலங்கையில் 39 தொழினுட்ப கல்லூரிகளில் இளம் புத்தாக்குனர் கழகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. 2019 ஆண்டு காலப்பகுதியில் நாடெங்கிலும் உள்ள இளம் புத்தாக்குனர் கழகங்களை சார்ந்தோருக்கு 12 விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

இத்தகைய புத்தாக்குனர் கழகங்களை தாபிப்பதனூடாக வேறுபட்ட துறைகளில் தொடர்புற்ற வகையில் பற்பல நன்மைகளாவன அதாவது, புத்தாக்கம் மற்றும் புதுக்கண்டுபிடிப்பு தொடர்பில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள், அவசியப்படக்கூடிய கருவியினை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவி (ரூபாய் 30000.00 இரண்டு கட்டங்களில்) மற்றும் அதிபுலமை சொத்து பற்றிய விழிப்புணர்ச்சி என்பன புத்தாக்குனர்களுக்கு கிடைக்கப்பெறுவதால் அவர்களுக்கு அவர்களது அறிவை விருத்தி செய்ய சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுகின்றது.

	தாபிக்கப்பட்ட புத்தாக்குனர் கழகங்களின் எண்ணிக்கை	நடத்தப்பட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எண்ணிக்கை	ரூபாய் 15000.00 வழங்கப்பட்ட கழகங்களின் எண்ணிக்கை
பாடசாலைகள்	111	8	60
மூன்றாம் நிலை கற்கைகள் நிறுவகங்கள்	39	4	0



2.3 தேசிய புத்தாக்குனர் தினம்

புத்தாக்குனர்களினால் பொருளாதாரத்திற்கு ஆற்றப்படும் பங்களிபபை பாராட்டும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி தேசிய புத்தாக்குனர் தினமாக பிரகனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் முதலாவது ஆணையாவதும் மிகு நிபுணத்துவம் கொண்டதுமான தேசப்பந்து கலாநிதி எ.என்.எஸ்.குலசிங்க அவர்களது, அளப்பரிய சேவையினை பாராட்டு முகமாகவும் அவரை நினைவு கூறும் முகமாகவும் அவரது பிறந்த நாளான இத்தினமானது தேசிய புத்தாக்குனர் தினமாக பிரகனப்படுத்தப்பட்டது.

தேசிய புத்தாக்குனர் தினத்தை பிரகனப்படுத்துவதன் நோக்கம்

- நாட்டில் புத்தாக்க சார்ந்த கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களினை மதிப்பீடு செய்வதற்கு புதிய செயன்முறை ஒன்றை வடிவமைத்தலும் இலங்கை வாழ் பிரஜைகளினை புதிய கண்டுப்பிடிப்புக்களை கண்டுப்பிடிப்பதற்கு தூண்டுதலும்.

- புத்தாக்குனர்களுடன் நெருங்கிய தொடர்பிணைப்பை ஏற்படுத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு வாய்ப்பினை வழங்கல்.

- புத்தாக்குனர் தினத்தை பிரகனப்படுத்துவதன் ஊடாக, புதிய முதலீட்டு வாய்ப்புக்களில் புத்தாக்குனர்களின் கவனத்தை திருப்புதல்.

- புதிய கண்டுப்பிடிப்புக்களின் ஊடாக பொருளாதாரம் விருத்தி செய்யப்படுவதற்கு இலங்கை சார் புத்தாக்கனர்களுக்கு முன்னுரிமை வழங்கல்.

- விருது பெற்ற புத்தாக்குனர்களை இணங்காணல்.

2.4 நிபுணத்துவம் மிகு புத்தாக்க மதிப்பீட்டு குழாம்

வருட காலப்பகுதியில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் அமுல்படுத்துகை செய்யப்பட்ட நானாவித நிகழ்ச்சித் திட்டகளுக்குள், புத்தாக்கங்களினை மதிப்பீடு செய்தல் எனும் செயன்முறையானது விசேட இடத்தை வகிக்கின்றது. பலவிதமான தொழினுட்பவியல் சிக்கல்களினை இலக்காக கொண்டு கண்டுபிடிக்கப்படும் புதிய கண்டுப்பிடிப்புக்களை அவற்றின் நிலைக்கேற்ப சரியான முறையில் வரிசைப்படுத்தப்படல் மிகு அவசியமாகும். இந்த கடன்பணியினை முன்னெடுக்கும் பொருட்டு வேறுப்பட்டு பணியினைச் சார்ந்த நிபுணர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது என்பதுடன், தெரிவு செய்யப்படும் இந்த மதிப்பீடு குழாமானது, வருடம் பூராகவும் புத்தாக்கங்க நிகழ்ச்சித்திட்டங்களினை மதிப்பீடு செய்யும். இந்த வருடம் ஆணைக்குழுவானது, அந்தந்த நிறுவகத்தலைவர்களின் பரிந்துரைப்பின் கீழ் 177 நிபுணர்களினை கொண்ட ஒரு மதிப்பீடு குழாமினை நியமனம் செய்துள்ளது.

2.5 புத்தாக்கங்களினை வெளிப்படுத்துவதற்கான சர்வதேச மாநாடு - "புத்தாக்கமும் அதன் தாக்கமும் - FITI 2019"

ஒரு புதுக்கண்டுப்பிடிப்பு அல்லது ஒரு புத்தாக்க கருத்தானது பிரபல்யமாவதற்கு, அப்புத்தாக்கமானது சரியான விதத்தில் சமூகத்திற்கு அறியச்செய்யப்படல் மிகு முக்கியமானதாகும். இந்த நிலையினை சாதிப்பதற்கு, புத்தாக்கமானது புத்தாக்குனரிக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்படாது சர்வதேச மட்டத்திற்கு எடுத்து செல்லப்படல் மிகவும் முக்கியமானதாகும். ஆதலினால், "புத்தாக்கமும் அதன் தாக்கமும் - FITI 2019 " எனும் தலைப்பில் ஒரு சர்வதேச மாநாடானது இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெற்றதுடன் இதன் நோக்கமானது, புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாக்கங்களினை வெளிப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குதல், புத்தாக்கங்களினை பற்றிய விபரங்களினை அறிந்து கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி தேவைகளுக்கான வழிகாட்டல்களினை பெற்றுக்கொள்ளல் என்பனவாகும்.


இந்த மாநாட்டின் போது பிரதான உரையானது, மென்செஸ்டர் பல்கலைகழகத்தின் பேராசிரியரும் ஐக்கிய இராச்சியத்தின் விரய மற்றும் வள முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளருமான பேராசிரியர். கார்ல் வில்லியம்ஸ் அவர்களினால் ஆற்றப்பட்டதுடன், "ஆராய்ச்சி அபிவிருத்தி புத்தாக்கங்களும் அவற்றின் சமூக தாக்கங்களும்" என்ற தலைப்பில் ஒரு உரையானது, "இலங்கை மென்பொருள் மன்றத்தின் தோற்றுனரான Dr. சஞ்சீவ வீரவர்ணவினால் ஆற்றப்பட்டுடன் "சரதாய புத்தாக்கங்கள்" எனும் தலைப்பில் ஒரு உரையானது, தகவல் தொடர்பாடல் மற்றும் தொழினுட்ப முகவராண்மையின் தலைப் பேராசிரியர்.ரொஹான் சமரஜீவ அவர்களினால் ஆற்றப்பட்டதுடன் வயம்ப பல்கலைகழகத்தின் விரிவுரையாளர் திருவதி.ஹெலி செனவிரட்ன அவர்கள் "இளம் புத்தாக்குனர்களின் கருத்துக்கள்" எனும் தலைப்பில் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து, ஆராய்ச்சியாளர்களை இலக்காக கொண்டு இரு பிரதான தலைப்புக்களின் கீழ் தொழினுட்பவியல் கூட்டத் தொடர்கள் முன்னெடுக்கப்பட்டன. மொத்தமாக 14 ஆராய்ச்சி கட்டுரைகள் ஆய்வு செய்யப்பட்டன.இவற்றுள் ஏழு (07) ஆராய்ச்சி ஆய்வு கட்டுரைகள் "சரதாய புத்தாக்கங்கள்" எனும் தலைப்பிலும் மற்றையவை "புத்தாக்கங்களும் அவற்றின் சமூதாய தாக்கங்களும்" எனும் தலைப்பில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

இந்த மாநாடானது, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடனும் மற்றும் இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்துடனும் கூட்டிணைந்து முன்னெடுக்கப்பட்டது



2.6 "இலங்கை புத்தாக்குனர்கள்" - புத்தாக்கங்களை பிரபல்யபடுத்துவதற்கு YouTube இன் ஊடாக அனுகல்

2019 ஆம் ஆண்டின் ஜுன் மாதம் இந்த நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களை பலரறிய செய்வதினூடாக ஓர் அங்கீகாரத்தை புத்தாக்குனர்களுக்கு வழங்குவதற்கேற்ற ஒரு பின்னணியை அமைத்தலும் அத்தோடு அவர்களின் புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு அக மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களின் ஆதரவினை பெற்றுக்கொள்ளலுமே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்காகும்.இந்த YouTube அலைவரிசையானது புத்தாக்குனர்களுக்கு புத்தாக்கங்களை பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருப்பதோடு ஆக்கவுரிமைக்கு விண்ணப்பிக்கும் செயன்முறை பற்றிய விளக்கங்களை தருகின்றது.



2.7 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அதிபுலமை சொத்து உரிமைகளை பாதுகாப்பதற்கு வழங்கப்படும் சேவைகள்.

இலங்கை புத்தாக்குனர்களின் ஆக்கப்பத்திர உரிமைகளினை பாதுகாக்கும் பொருட்டும் அத்துடன் அவர்களது புத்தாக்கற்றிறன் சூறையாடப்படலினை தடுக்கும் பொருட்டும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது உயர் தொழினுட்ப திறன் மிக்க அறிவினையையும் அதனுடன் தொடர்புடைய சேவைகளினையும் வழங்குகிறது. இந்நோக்கத்திற்காக, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினை சார்ந்த பதவியணியினருக்கு முறையானதொரு பயிற்சியொன்று உலக அதிபுலமைச் சொத்து அலுவலகத்துடன் (WIPO) கூட்டிணைந்து, தொழினுட்ப மற்றும் புத்தாக்க ஆதரவு நிலையத்தினால் (TISC) வழங்கப்பட்டது. இதன்பெறுபேராக இந்த வருடத்தின் போது, 32 விண்ணப்பங்களாவன ஆக்கவுரிமை பெறுதற்பொருட்டு தேசிய அதிபுலமைச் சொத்து அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, அதிபுலமைச் சொத்து தொடர்பில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துவதன் மூலமும் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்து ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் தொடர்பில் நிதியுதவிகளினை வழங்குவதள் மூலமும்

வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் ஆக்கவுரிமை பத்திரங்களின் எண்ணிக்கையின் அளவினை அதிகரிக்க உதவுகின்றது.

சர்வதேச ஆக்கவுரிமை பத்திரங்களுக்கான விண்ணப்ப கட்டணம், ஆப்பவுரிமை கூட்டுறவிற்கான கட்டணம் (PCT) மற்றும் சட்டக்கட்டணம் என்பனவற்றை மீளளிப்பு செய்தல் பொருட்டு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது தனது ஆதரவினை புத்தாக்குனர்களுக்கு வழங்குகின்றது.இதன் நிமித்தம், கட்டணம் செலுத்தப்பட்மைக்கான பற்றுச்சீட்டு அத்துடன் இப்புத்தாக்கத்தின் மூலம் பெறக்கூடிய சமூக, பொருளாதார சுற்றாடல் மற்றும் ஏனைய நன்மைகள் என்பனவற்றை உள்ளடக்கிய முதலீட்டு திட்டம் அத்துடன் எழுத்திலான கோரிக்கை கடிதம் என்பனவற்றை புத்தாக்குனர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

- ஆக்கவுரிமை தகவல்களினை பரிசலிப்பதற்கு வழங்கப்படும் உதவிகள் -15
- ஆக்கவுரிமை அறிக்கைகளினை வரைபு செய்தல் -15
- ஆக்கவுரிமைக்கான விண்ணப்ப கட்டணத்தை மீளளிப்பு செய்தல் -32
- ஆக்கவுரிமைக்கான புதுப்பிப்பு கட்டணத்தை மீளளிப்பு செய்தல் -04
- சர்வதேச ஆக்கவுரிமை பத்திரங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான நிதி ஆதரவு -02
- ஆக்கவுரிமை கூட்டுறவு உடன்படிக்கைக்கான நிதி ஆதரவு -03

2016 ஆம் ஆண்டின் பாதீட்டிள் 375 எனும் இலக்கத்தைக் கொண்ட முன்மொழியிற்கு அமைவுற, மதலாச்சிய, கரன்தெனிய மற்றும் நொச்சியாகம் ஆகிய இடங்களில் 03 புத்தாக்க ஆதரவு நிலையங்களினை தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



2.8 புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான IAFM-SL கருத்திட்டம்.

புத்தாக்கங்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவும் அத்துடன் அவர்களது புத்தாக்கங்களினை காசாக்குவதற்கு ஏற்ப வகையில் அவற்றில் உரிய மாற்றங்களினை ஏற்படுத்துவதற்கு ஆராய்ச்சிகளினை முன்னெடுப்பதற்கு உதவி செய்வதற்கு ஒரு மூலோபாய முறையினை நடைமுறைப்படுத்துவதற்குரிய இந்த இலங்கை புத்தாக்கங்களினை விரைவு படுத்தும் நிதியிட்டு முறைமை (IAFM-SL) எனப்படும்.கருத்திட்ட நேர்அமைச்சின் கண்காணிப்பாளர் கீழ் முன்னெடுப்பதற்கான பணியானது, அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது.புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான அதிகாரமானது ஆணைக்குழுவிற்கு அதனது சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.தேசிய வருவாய்க்கு பங்களிப்பு செய்யும் வகையில் புத்தாக்குனர் புத்தாக்கம் ஒன்றினை உருவாக்கவும் அப்புத்தாக்கத்தின் மூலமான முடிவுற்பத்தியானது வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படுத்துவதற்கும் ஆதரவு அளிப்பதே இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்காகும் நிதியியல் ஆதரவு கோரி விண்ணப்பிக்கப்படுமிடத்து அது பல கட்டங்களில் கண்காணிப்பிற்கு உட்படும்.

மதிப்பீடு செய்தல் தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களான, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் மதிப்பீட்டு குழுவிற்கு பொருத்தமானவர்கள் என பெயர் குறிப்பிட்டு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட கடிதங்கள் கிடைக்கப்பெற்றன.கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களினை மதிப்பீடு செய்வதற்கும் அத்துடன் புத்தாக்கங்களினை மதிப்பீடு செய்வதற்கும் திகதிகள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இச்செயன்முறைகள் முற்று முழுதாக நிறுத்திப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படக் காரணம், அந்நேரத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலையே அதாவது தொழினுட்பவியல் மதிப்பீட்டு குழாமின் பதவிவழி தலைவராக இருக்கப்படவேண்டிய ஆணையாளர் உட்பட பணிப்பாளர் சபையும் மாற்றப்பட்தாகும்.2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 08 விண்ணப்பங்களும் 2020 ஆம் ஆண்டில் நோக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டன.

2.9 புத்தாக்கங்களிற்கான வர்த்தகமயப்படுத்துகை அடிப்படையினை தாபிப்பதற்கான "நவ நிபயும் திரிய" (Nawa Nipayum Diriya)

புத்தாக்கங்களினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு உதவும் வகையில் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் "நவ நிபயும் திரிய" பிரானதொரு நிகழ்ச்சித்திட்டமாகும்.குறிப்பிட்டதொரு புத்தாக்கம் சந்தை வாய்ப்பினை கொண்டுள்ளது என, திறன் மிக்க நிபுணத்துவ குழாமினால் இனம் கண்டுக்கொள்ளப்பட்ட பின்பு அது தொடர்பிலான பரிந்துரைப்புக்களாவன, நேர் அமைச்சின் பிரநிதிகளால் உருவாக்கப்பட்ட நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்படும்.நிதி செயற்குழுவானது பரிந்துரைப்பு செய்யப்பட்ட இப்புத்தாக்கம் தொடர்பில் கள பரிசோதனையை முன்னெடுத்த பின்னர், தீர்மானத்தை எடுக்கும்.இத்தீர்மானது, பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்துகை செய்யப்படும்.

புத்தாக்கத்கின் நிமித்தம் வட்டியின்றி கொடுக்கப்படும் நிதியுதவி புத்தாக்குனர் குறித்துரைத்த காலத்திற்குள் அறுதியீடு செய்தல் வேண்டும். மதிப்பீடு செயற்குழுவின் பரிந்துரைப்பின் கீழ் புத்தாக்கத்தை இறுதி நிலை உற்பத்திக்கு தரமுயர்த்துவதற்கு தேவையான தொழினுட்பவியல் உதவி, அரச நிறுவனங்களின் ஊடாக பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான நிதியுதவி, வட்டியில்லா கடன்கள் மற்றும் புத்தாக்கத்தின் மூலவகை மாதிரியினை விருத்தி செய்வதற்கு அரச நிறுவனங்களின் ஊடாக உறுதுணையாக இருத்தல் போன்ற வேறுப்பட்ட வகையிலான உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதைவிட, மொரட்டுவ பல்கலைகழகத்தைச் சேர்ந்த மாணவர்களினால் உருவாக்கப்பட்ட Formula Student SAE, மின்னியல் ஊர்தி எனும் கருத்திட்டத்திற்குரிய மின்கலம் தொடர்பில் யூரோ 8620.56 (ரூபாய். 1,736,942.88) ஆனது மானியமாக வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, புத்தாக்கங்கள் தொடர்பில் 70 மதிப்பீடு செயன்முறைகளும் மற்றும் 16 கள பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்ட அதே வேளையில், ரூபாய் 1,599,500.00 பெறுமதியான இயந்திரங்களாவன பெறுகை செயன்முறைகளினூடாக பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் இவற்றுள் 04 புத்தாக்குனர்கள் நிதி ஆணைக்குழுவிற்கு பரிந்துரைப்பு செய்யப்பட்டனர்.

மேலும், மேற்கொண்ட விருத்தியின் நிமித்தம் பரிந்துரைப்பு செய்யப்பட்ட 22 புத்தாக்கங்களாவன, தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திற்கு (NRED) முன்னளிப்பு செய்யப்பட்டதோடு அவற்றின் நிமித்தம் ரூபாய் 422,621.83 கொடுப்பனவு செய்யப்பட்டது.

2.10 புத்தாக்குனர்களுக்கு தொழினுட்பவியல் உதவிகளினை வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்ட தொழினுட்பவியல் அடைக்காப்பக நிலையங்கள்

இலங்கை சார் புத்தாக்குனர்களுக்கு அவர்களுடைய புத்தாக்கங்களினை மேலும் விருத்தி செய்வதற்கு உதவும் முகமாகவும் அதுபோன்று அந்த புத்தாக்கங்களினை சந்தை படுத்துகை செய்வதற்கு நெறிப்படுத்தவுமே இந்த தொழினுட்பவியல் அடைக்காப்பக நிலையங்கள் தாபிக்கப்பட்டன.இதற்கமைவுற தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திலும் (NRED) மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் இரு நிலையங்கள் தாபிக்கப்பட்டன.

- இந்த நிதிக்கூற்றுக்களாவன கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களை உள்ளடக்கியுள்ளது:
- நிதிச் செயலாற்றுகை கூற்று
- ஆணைக்குழு பற்றிய விபரங்களைத் தரும் நிதியியல் நிலை பற்றிய கூற்று
- மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழுவின் ஒப்புரவில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்கூறும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒப்புரவில் மாற்றம் பற்றிய கூற்று
- ஆணைக்குழுவின் காசு பிறப்பிக்கக்கூடிய திறமை மற்றும் ஆணைக்குழுவின் தேவைப்பாடுகளுக்கு அமைவுற அவை பயன்படுத்தப்பட்டமை போன்ற விபரங்களினை தருகின்ற காசோட்டக் கூற்று
- கணக்கியற் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்க விபரங்களை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான பொறுப்பு

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்களிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவுற, ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பு என்பனவற்றிற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

2.3 அளவீட்டின் அடிப்படை

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களான சட்டுறு அடிப்படையில் வரலாற்று கிரய முறையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படாது நிலையான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதோடு பணவீக்கத்துடன் தொடர்புடைய காரணிகள் தொடர்பில் எதுவித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

2.4 நாணய செயற்பாடும் அதனது முன்னளிப்பும்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன இலங்கை ரூபாயினை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் இதுவே நிறுவகத்தின் செயற்பாடுகள் நிமித்தம் பயன்படுத்தப்படும் நாணயமாகும். நிதியியல் ரீதியிலான தகவல்களாவன இலங்கை ரூபாயில் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2.5 திரவியத் தன்மையின் பாவனை, ஈடு செய்தல் மற்றும் முழு நாணயமாக்குதல்

திரவியங்களும் மற்றும் கூட்டுத்தொகையும்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்கள் (SLPSAS) 1 இல் நிதியியல் கூற்றுக்களினை அனுமதித்தல் என்பதில் அனுமதிக்கப்பட்டதற்கு அமைவுற, ஒரே தன்மையினதான உருப்படிகளினைக் கொண்ட ஒவ்வொரு திரவிய வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனியாக முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரே தன்மையினது அல்லாத உருப்படிகள் மற்றும் செயற்பாடுகள் என்பன அவை திரவிய வகுதிகளாக இல்லாத போதிலும் அவை தனித்தனியாக முன்னளிப்பு செய்யப்படுகின்றது.

ஈடு செய்தல்

இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச்சட்டங்களில் அனுமதிக்கப்பட்டாலேயன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் வருமானம் மற்றும் செலவினம் என்பன நிதியியல் கூற்றுக்களில் ஈடு செய்யப்படவில்லை.

முழு நாணயமாக்குதல்

“நிதியியல் கூற்றுக்களில் தரப்பட்டுள்ள தொகைகளாவன அண்மித்த ரூபாய்க்கு முழு நாணயமாக்குதல் செய்யப்பட்டுள்ளது.”

2.6 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுக்களாவன தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.7 அறிக்கை செய்யும் காலப்பகுதிக்குப்பின் நிகழ்ந்த நிகழ்வுகள்

அறிக்கை செய்யப்பட்ட திகதிக்கும் மற்றும் நிதியியல் கூற்றுக்கள் வெளியீடு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் இடம்பெற்ற அனுகூல மற்றும் பிரதிகூல நிகழ்வுகள், அறிக்கை செய்யப்பட்டபின் நிகழ்ந்த நிகழ்வுகளாகக் கருதப்படும்.
இதனடிப்படையில் அறிக்கை செய்யப்பட்ட திகதிக்குப் பின் எதுவித நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

3. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றபோது நிலவிய நாணய பரிமாற்று வீதத்தின் அடிப்படையில் வெளிநாட்டு பரிமாற்று வீதத்திற்குட்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களும் இலங்கை ரூபாய்க்கு அதாவது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் செயற்படும் நாணயத்திற்கு மாற்றப்பட்டது.

4. சொத்து மற்றும் கருவிகள்

இனம் கண்டறியப்படும் அடிப்படை
திருத்தி பாவிக்கக்கூடியதும் தொட்டுணரக்கூடியதுமான உருப்படிகளாக இருக்கின்ற சொத்து மற்றும் கருவிகளாவன, ஒரு வருடத்திற்கும் அதிகமாக பாவிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அளவீட்டின் அடிப்படை
ஒரு சொத்தாக இனம் காணப்படும் சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள் என்பன, ஆரம்பத்தில் அதன் கொள்விலையில் மதிப்பீடு செய்யப்படும் கொள்விலை எனும்போது அதற்குள் அச்சொத்தை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட செலவினம் மற்றும் அதைத் தொடர்ந்து அச் சொத்திற்கு புதிதாக ஒரு பாகத்தை சேர்க்கவோ அல்லது ஒரு பாகத்தை பிரதியீடு செய்யவோ ஏற்பட்ட செலவினம் என்பன அதற்குள் உள்ளடங்கும்.
கணணி கருவிகளினை பொறுத்தவரையில் அக் கணணியின் செயற்பாட்டுடன் தொடர்புற்றவகையில் கொள்வனவு செய்யப்படும் மென்பொருள் தொடர்பில் செலவிடப்படும் செலவினமும், அக் கணணியின் கொள்விலையுடன் சேர்க்கப்படும்.
சொத்து மற்றும் கருவிகளின் பாகங்களாவன, வேறுபட்ட பாவனை காலத்தை கொண்டிருப்பின், அவை குறிப்பிட்ட அந்த சொத்து மற்றும் கருவிகளினது தனிப்பட்ட உருப்படிகளாக (பிரதான ஆக்கக்கூறுகள்) கருதப்படும்.

இந்த சொத்து மற்றும் கருவிகள் தொடர்பில் இடம்பெற்ற திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் அந்தந்த காலப்பகுதிக்கான இலாப மற்றும் நட்ட கணக்கில் பதியப்படும். பிரதான திருத்தற் செலவினங்களாவன், அந்த சொத்தின் நடப்பு பெறுமதியினை அதிகரிக்கும் பொருட்டு அல்லது எதிர்கால பொருளில் அனுகூலங்களினை கருத்திற்கொண்டு அக் குறிப்பிட்ட சொத்தின் கொள்விலைப் பெறுமானத்தின் ஒரு பகுதியாக கருதப்படும். பிரதான திருத்தற் செலவினங்கள், அச் சொத்தின் எஞ்சியுள்ள பாவனை காலத்தை கருத்திற்கொண்டு பெறுமானத் தேய்வுக்கு உட்படுத்தப்படும்.

பெறுமானத் தேய்வு
சொத்து மற்றும் கருவிகளின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பீட்டு பாவனைக் காலத்தை கருத்திற்கொண்டு நேர்கோட்டு முறையில் கணிப்பீடு செய்து இலாப நட்ட கணக்கில் பதியப்படும்.

நடப்பு மற்றும் ஒப்புமை வருடங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக் காலம் வருமாறு:

சொத்தின் வகை	வருட வீதம	காலப்பகுதி (வருடங்கள்)
அலுவலக தளபாடம்	15%	06 2/3
அலுவலக கருவிகள்	20%	05
பெயர் பலகைகள்	10%	10
வாகனங்கள்	20%	05
ஊடக கருவிகள்	20%	05
தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா	20%	05
அலுவலக பொருத்துகள்	15%	06 2/3
அடைகாக்கும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள	20%	05

2014 ஜனவரி மாதம் 1ஆம் திகதியிலிருந்து வருடாந்த நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்படுமிடத்து இலங்கை பொதுத்துறை கணக்கியற் கட்டளைச் சட்டம் (SLPSAS) பயன்படுத்தப்படுகின்றது.

முற்றுமுழுதாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகள்

முற்றுமுழுதாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதும் நிதியியல் நிலைமைக்கூற்றில் உள்ளவாறான திகதியில் இன்னமும் பாவனையில் உள்ளதுமான ஆணைக்குழுவினது சொத்துக்கள் கருவிகள் பற்றிய விபரங்கள் வருமாறு.

டிசம்பர் 31 இல் உள்ளவாறாக	2019 இலங்கை ரூபாய்	2018 இலங்கை ரூபாய்
அலுவலக தளபாடம்	708,582	722,747
அலுவலக கருவிகள்	6,214,432	5,102,156
வாகனங்கள்	16,470,191	16,389,161
ஊடக கருவிகள்	1,266,440	1,279,490
தொலைகாட்சி மற்றும் கட்புல நாடா	111,750	102,500
மொத்தம்	**24,771,395**	**23,596,054**

பாவனையிலிருந்து ஓய்வுபெற்ற சொத்து மற்றும் கருவிகள்

ஆணைக்குழுவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் கருவிகளாவன அறிக்கை செய்யும் திகதியில் பாவனையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளது.

டிசம்பர் 31 இல் உள்ளவாறாக	2019 இலங்கை ரூபாய்	2018 இலங்கை ரூபாய்
அலுவலக கருவிகள	98,887	98,887
பெயர் பலகைகள்	110,805	110,805
கண்காட்சி சாவடிகள்	37,690	37,690
அலுவலக பொருத்துக்கள்	1,065,682	1,085,682
மொத்தம்	**1,313,064**	**1,333,064**

5. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

சம்பந்தப்பட்ட நியதிச்சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவுற, ஊழியர்கள், ஊழிய சேமலாபநிதிச் சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சட்டத்திற்கு உரித்துடையவர்கள் ஆவார்கள். ஊழியர் சேமலாபநிதியத்தை பொறுத்தவரையில், ஆணைக்குழுவும் மற்றும் ஊழியர்களும் முறையே ஊழியர் சம்பளத்தில் 15% மற்றும் 10% இனை ஊழியர்களின் சேமலாபநிதியத்திற்கு பங்களிப்பு செய்யும் அதேவேளையில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 3% இனை ஆணைக்குழு பங்களிப்பு செய்யும்.

6. நிதியம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு அரசின் பங்களிப்பானது, அரசின் வருடாந்த மதிப்பீட்டில் இரு வகுதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவையாவன,

1. நடப்பு செலவினத்திற்கான நிதியம்
2. மூலதன செலவினத்திற்கான நிதியம்

நடப்பு மானியமானது வருமானம் மற்றும் செலவின கணக்கில் கணக்கீடு செய்யப்படுவதுடன், மூலதன மானியமானது, இலங்கை பொதுத்துறை கணக்கியற் சட்டம் 20 இற்கு அமைவுற கணக்கீடு செய்யப்படும்.

ஆணைக்குழுவின் நடப்பு செலவினமானது, வருமான மற்றும் செலவின கணக்கில்,

1. நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்
2. தனியாள் வேதனாதிகள்

ஆகியவற்றின் கீழ் காட்டப்படும்.

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க ஊக்குவிப்பு சட்டத்திற்கு அமைவுற ஆணைக்குழுவின் நோக்குகளினை பூரணத்துவம் செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்ட செலவினங்கள் மூலதன செலவினங்களாக பிரதிநிதித்துவம் செய்யப்படும்.

7. காசோட்டக்கூற்று

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் காசோட்டக்கூற்று அரச பொதுத்துறை கணக்கியற் சட்டம் 2 இற்கு அமைவுற நேரடியற்ற முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

8. நிதி சேகரிப்பு / அனுசரணையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள்

ஆணைக்குழுவானது ஒதுக்கீட்டு கணக்குகளின் ஊடாக அனுசரணையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரிடமிருந்து நிதியத்தினை ஆணைக்குழு சேகரிக்கின்றது.

9. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

ஆணைக்குழுவானது, வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களினை இலங்கை பொதுத்துறை கணக்கியற் சட்டம் 21 இற்கு அமைவுற, அதனது செயற்பாடுகளுக்கு உரித்தான நாணய பெறுமதிக்கு அமைவுற்ற வகையில் அறிக்கை செய்கின்றது.

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

		2,019	2,018 மீள் குறிப்பீடு
		இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்
1	**காசும் வங்கி மீதியும்**		
	காசுப்புத்தகம் - 033100101791066	905,441	2,880,945
	காசுப்புத்தகம் - 033100121791065	100,664,518	99,059,748
	காசுப்புத்தகம் - 204402131791066 (Foreign Curency)	162,483	-
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**101,732,442**	**101,940,693**
2	**மீள்ளிக்கத்தக்க வைப்புக்கள்**		
	கவின்ரோ புரபட்டி டெவலப்பர்ஸ்	2,400,000	2,400,000
	வரை. அமெரிக்கன் வாட்டர் (தனியார்) நிறுவகம்	-	10,000
	வரை. எக்ஸ்பிரஸ் வாட்டர் (தனியார்) நிறுவகம்	5,000	-
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**2,405,000**	**2,410,000**
3	**ஐயக்கடன் ஒதுக்கீடு 100%**		
	ஜனவரி 31 இல் உள்ளவாறான மிகுதி	9,802,964	9,802,964
	வருடத்திற்கான ஒதுக்கீடு	-	-
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**9,802,964**	**9,802,964**
4	**இருப்பு மதிப்பீடு (இலங்கை அரச பொதுத்துறை கணக்கியற் கட்டளை சட்டம் 9 - SLPSAS)**		
	காகிதாயிகள் இறுதி இருப்பானது SLPSAS 9 இற்கு அமைவுற முதல் வந்தது முதல் போதல் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது		
	காகிதாயிகள்		
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	431,446	337,059
	வருடகாலத்தில் கொள்வனவு	961,655	786,989
	வருடகாலத்தில் செலவினம்	(907,855)	(692,602)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**485,246**	**431,446**
	T - சேர்ட்டுகள்		
	ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	675,885	199,375
	வருடகாலத்தில் கொள்வனவு	-	998,450
	வருடகாலத்தில் செலவினம்	260,620	521,940
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**415,265**	**675,885**

5. பெறுமானத்தேய்வு (நிலையான சொத்துக்கள்)

	அலுவலக கருவிகள்	தளபாடங்களும் கருவிகளும்	பெயர் பலகைகள்	வாகனங்கள்	கண்காட்சி சாவடிகள்	ஊடக கருவிகள்	தொலைக் காட்சி மற்றும் கானொளி நாடாக்கள் பதிவு செய்யும் கருவி	அலுவலக பொருத்துக் கள்	இயந்திரமும் கருவிகளும் (அடைகாப்பக நிலையங்கள்)	மொத்தம்
	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்
கொள்விலை										
2018 ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	12,744,164	2,201,254	316,800	16,470,191	165,120	1,371,191	1,000,550	1,941,908	-	36,211,180
வருடத்தில் சேர்க்கப்பட்டவை	1,542,173	231,387	-	-	-	-	-	-	-	1,773,560
வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை	(2,539,410)	(6,250)	(105,495)	-	(127,430)	(3,201)	(50,250)	(782,406)	-	(3,614,442)
2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு)	**11,746,927**	**2,426,391**	**211,305**	**16,470,191**	**37,690**	**1,367,990**	**950,300**	**1,159,502**	**-**	**34,370,296**
வருடத்தில் சேர்க்கப்பட்டவை	-	-	-	-	-	910,060	-	-	4,517,802	5,427,862
வருடத்தில் விற்பனை செய்யப்பட்டவை	(4,470)	(14,166)	-	-	-	(13,050)	-	(20,000)	-	(51,686)
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**11,742,457**	**2,412,225**	**211,305**	**16,470,191**	**37,690**	**2,264,999**	**950,300**	**1,139,502**	**4,517,802**	**39,746,472**
திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு										
2018 ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	9,104,512	993,644	246,558	16,442,752	165,120	1,296,313	350,515	895,998	-	29,495,410
வருடத்திற்கான விதிப்பனவுகள்	1,179,123	245,546	10,050	16,206	-	45,200	170,213	11,073	-	1,677,411
விற்பனைகள்	(2,538,280)	(6,250)	(105,495)	-	(127,430)	(3,201)	(50,250)	(366,651)	-	(3,197,557)
2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு)	**7,745,356**	**1,232,941**	**151,113**	**16,458,958**	**37,690**	**1,338,312**	**470,478**	**540,420**	**-**	**27,975,264**
வருடத்திற்கான விதிப்பனவுகள்	1,301,200	255,547	10,050	11,233	-	58,713	167,742	11,073	48,991	1,864,549
விற்பனைகள்	(2,868)	(14,166)	-	-	-	(13,050)	-	(5,532)	-	(35,616)
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**9,043,688**	**1,474,321**	**161,162**	**16,470,191**	**37,690**	**1,383,975**	**638,220**	**545,961**	**48,991**	**29,804,197**
தேறிய புத்தக பெறுமதி										
2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக	4,001,571	1,193,450	60,193	11,233	-	29,678	479,822	619,082	-	6,395,032
2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக	2,698,769	937,903	50,143	0	-	881,024	312,080	593,540	4,468,811	9,942,275



நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

	2,019 இலங்கை ரூபாய்	2,018 மீள் குறிப்பீடு இலங்கை ரூபாய்
6 கொடுக்கவேண்டிய ஏனையவைகள்		
கடன்கொடுத்தோர்	3,862,139	4,800
டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**3,862,139**	**4,800**
7 நிலுவைச் செலவினங்கள்		
செலுத்தப்படவேண்டிய துப்புரவாக்கற் செலவினம்	59,411	58,509
செலுத்தப்படவேண்டிய நீர்க்கட்டணம்	7,837	6,411
செலுத்தப்படவேண்டிய மின்சாரக் கட்டணம்	122,568	130,785
செலுத்தப்படவேண்டிய தொடர்பாடல் செலவினம்	39,782	54,020
செலுத்தப்படவேண்டிய எரிபொருள், மசகு எண்ணெய் செலவினம்	21,997	5,300
செலுத்தப்படவேண்டிய கணக்காய்வு கட்டணம்	1,724,300	1,236,233
செலுத்தப்படவேண்டிய உள்நாட்டு இறைவரி PAYE	1,398	-
செலுத்தப்படவேண்டிய மேலதிக நேர வேலை கட்டணம்	13,572	3,443
செலுத்தப்படவேண்டிய ஏனைய ஒப்பந்த சேவைகள் கட்டணம்	141,980	93,635
செலுத்தப்படவேண்டிய சஹசக் நிமவும்	6,334,534	74,284
செலுத்தப்படவேண்டிய ஏனைய படிகள்	96,500	-
செலுத்தப்படவேண்டிய பிரயாண செலவினம்	4,070	-
செலுத்தப்படவேண்டிய வாகன திருத்துகை மற்றும் பேணுகை	25,982	-
புத்தாக்கம் - புத்தாக்குனர் மேம்படுத்துகை	2,326,054	-
செலுத்தப்படவேண்டிய சர்வதேச கண்காட்சி	111,003	-
செலுத்தப்படவேண்டிய மாகாண மட்டத்து கொடுப்பனவுகள்	177,000	41,500
செலுத்தப்படவேண்டிய காகிதாயிகள்	111,686	-
செலுத்தப்படவேண்டிய பதில் கடமையாற்றல் படிகள்	-	41,395
செலுத்தப்படவேண்டிய முத்திரை கட்டணம்	1,950	-
செலுத்தப்படவேண்டிய புத்தாக்குனர் கழகங்கள்	715,000	-
செலுத்தப்படவேண்டிய ஏனைய நிர்வாக செலவினம்	21,080	-
செலுத்தப்படவேண்டிய நிதியுதவி - ஆக்கவுரிமை பத்திரம் நிரப்பல்	13,225	-
டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**12,070,928**	**1,745,516**
8 பணிக்கொடை		
1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டம்-பணிக்கொடை கொடுப்பனவு		
ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	2,112,204	1,688,286
வருடத்திற்கான ஒதுக்கீடு	708,053	624,461
வருடத்திற்கான பணிக்கொடை கொடுப்பனவு	-	(200,543)
டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**2,820,257**	**2,112,204**
9 புத்தாக்குனர் விரைவுபடுத்துகை நிதிய பொறிமுறை - இலங்கை (IAFM-SL)		
ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி	46,472,155	5,000,000
கிடைக்கப்பெற்ற நிதியம்	-	50,599,755
வருடத்திற்கான செலவினம்	-	(9,127,600)
டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி	**46,472,155**	**46,472,155**

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

		2,019	2,018 மீள் குறிப்பீடு
		இலங்கை ரூபாய்	இலங்கை ரூபாய்
10 தேசிய அடைக்காப்பக நிதியத்திற்கான செலவினம்			
ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி		46,240,087	54,764,654
கிடைக்கப்பெற்ற நிதியம்		5,000,000	-
அடைக்காப்பகங்களினை தாபிப்பதற்கான செலவினம்			
தே.எ.ஆ.அபிவிருத்தி நிலையம்		-	(8,524,567)
ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு	5	(39,391)	-
ருகுணு பல்கலைக்கழகத்தின் மீதான கடன் தீர்வு செலவினங்கள்	5	(9,599)	-
டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**51,191,096**	**46,240,087**
11 மூலதன மானியம்			
ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி		9,756,200	8,580,751
கிடைக்கப்பெற்ற நிதியம்		58,000,000	85,750,000
கருத்திட்ட செயற்பாடுகள் மீதான செலவினம்	17	(69,430,417)	(82,906,939)
பதவியணி செயற்றிறன் நிர்மானம்		(352,315)	(1,423,839)
மூலதன மானிய கடன் தீர்வு - நிலையான சொத்துக்கள்	5	(1,815,558)	(1,691,808)
SLECC யின் போது கம்பளம் சேதமாகியதால் ஏற்பட்ட இழப்பு - சஹசக் 2017		-	(124,130)
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்திலிருந்து கிடைக்கப்பெற்ற மீளளிக்கத்தக்க வைப்புகள் - 2017 (மேலதிக ஒதுக்கீடு)		-	354,972
2017 ஆம் ஆண்டில் தவறாக பதிவுசெய்யப்பட்ட செலவினம் திருத்தி பதிதல்		-	1,482,797
டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**(3,842,091)**	**10,021,804**
2018 இன் மூலதன மானிய கடன் தீர்வு சீராக்கப்படல்		-	
மேலதிக பெறுமான தேய்வு		-	15,300
மூலதனமயமாக்கலுடன் தொடர்புடைய பெறுமான தேய்வு		-	(904)
SN இடத்திற்கு முற்பண கொடுப்பனவு		-	(280,000)
2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி (மீள் குறிப்பீடு)		-	**9,756,200**
12 இலங்கை புத்தாக்குனர் நிதியம்			
ஜனவரி 1 இல் உள்ளவாறான மிகுதி		8,998,495	8,998,495
கிடைக்கப்பெற்ற நிதியம்		-	-
Invent 2018 இன் கீழ் மானியப் பகிர்வு		-	-
டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி		**8,998,495**	**8,998,495**
13 அரச பங்களிப்பு			
அரச பங்களிப்பின் சுருக்க விபரம் வருமாறு			
இலங்கை கணக்கியற் சட்டம் 24 இற்கு அமைவுற			
நடப்பு மானியம்		42,699,775	48,818,700
மூலதன மானியம்		58,000,000	85,750,000
வருடத்திற்கானது		**100,699,775**	**134,568,700**

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

		2019	2018 மீள் குறிப்பீடு
		ரூபாய்	ரூபாய்
14	**ஏனைய வருமானம்**		
	அனர்த்த கடன் வட்டி	117,617	65,282
	வெளிநாட்டு நாணய வட்டி	825	-
	நானாவித வருமானம்	78,500	2,500
	விற்பனை வரும்படி	300	-
	சஹசக் நிமவும் தொடர்பில் வெளிநாட்டு பிரதிநிதிகள், பதிவுகள், சாவடிகள்	161,901	-
		359,143	**67,782**
15	**தனி ஆள் வேதனாதிகள்**		
	சம்பளங்களும் கூலிகளும்	9,729,078	8,647,730
	வாழ்க்கைப்படி செலவினம்	2,209,035	2,274,455
	தொழில் சார்பியல் படிகள்	143,806	132,700
	ஏனைய படிகள்	583,500	-
	சம்பளமற்ற விடுமுறை கட்டணம்	(14,895)	(2,369)
	பதில் கடமையாற்றல் படிகள்	115,438	108,895
	சீராக்கற் படிகள்	145,631	752,265
	ஊழியர் சேமலாப நிதி நிதிய செலவினம்	1,788,483	1,637,972
	ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய செலவினம்	357,697	327,594
	மேலதிக நேரம் / விடுமுறை கொடுப்பனவு	872,738	457,850
	உறுப்பினர்களுக்கான வேதனங்கள்	1,275,080	1,423,570
	பதவியணி செயற்றிறன் நிர்மாணம்	352,315	1,423,839
		17,557,905	**17,184,502**
16	**நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினம்**		
	பிரயாண செலவினம் - உள்ளூர்	508,121	195,837
	பிரயாண செலவினம் - வெளியூர்	32,550	4,072,159
	காகிதாயிகள்	1,054,432	771,693
	எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் செலவினம்	658,844	531,594
	திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் - கருவிகள்	161,672	48,129
	திருத்தற் மற்றும் பேணல் செலவினங்கள் - வாகனங்கள்	1,243,257	1,416,021
	தபாற் கட்டணம்	102,851	38,720
	தொடர்பாடல் கட்டணம்	639,103	760,725
	பயன்பாட்டு செலவினங்கள்	42,645	25,178
	ஒப்பந்த செலவினங்கள்	1,921,055	1,912,658
	மின்சார கட்டணங்கள்	1,784,374	1,768,387
	துப்புரவாக்கற் கட்டணங்கள்	700,244	667,765
	நீர்க் கட்டணங்கள்	94,614	121,544
	வாடகை செலவினங்கள்	17,173,438	16,808,640
	களியாட்ட செலவினங்கள்	268,909	235,035
	புதினப்பத்திரிகை பருவ சஞ்சிகை செலவினங்கள்	1,871	760
	கணக்காய்வு கட்டணங்கள்	488,067	925,300
	குத்தகை, வாடகை செயற்படச் செய்தல்	2,387,400	2,387,400
	ஏனைய நிர்வாக செலவினங்கள்	455,890	1,362,514
		29,719,337	**34,050,059**

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

		2019	2018 மீள் குறிப்பீடு
		ரூபாய்	ரூபாய்
17	**புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்**		
	அடிமட்டத்து புத்தாக்குனருக்கு ஊக்கமளிப்பு	417,440	472,018
	மாகாண மட்டத்து தெரிவு கண்காட்சி	3,865,778	3,858,841
	தேசிய புத்தாக்குனர் தின நிகழ்ச்சித்திட்டம்	-	8,501,654
	"Innova minds" தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்	365,730	11,107,243
	புத்தாக்குனர் - புத்தாக்கம் மேம்படுத்துகை செயற்பாடுகள்	6,935,565	12,364,875
	ஜனாதிபதி விருதுகள்	18,000	3,666,072
	நடுவர்களின் தர மேம்படுத்துகை	-	193,500
	சஹசக் நிமவும்' தேசிய கண்காட்சி	22,098,263	26,050,921
	சர்வதேச கண்காட்சியில் பங்குபெறுகை செலவினம்	20,121,250	16,175,756
	இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு அக கட்டமைப்புக்களினை மேம்படுத்தல்	3,803	21,122
	ஆக்கவுரிமை பத்திரங்களினை நிரப்புவதறகான நிதி உதவி	172,504	774,937
	விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்தல்	1,198,444	-
	பயிற்சிப்பட்டறைகள் / கருத்தரங்குகளினை நடாத்தல்	159,553	-
	ஆக்கவுரிமை தொடர்பில் புத்தாக்குனர்களுக்கு ஆதரவு வழங்கல்	475,438	-
	புத்தாக்குனர் கழகங்களினை தாபித்தல்	1,910,377	-
	புத்தாக்குனர்களுடன் காலாண்டுக்கொருமுறையான கூட்டங்கள்	369,890	-
	சில்பசேனா	11,318,383	-
		69,430,417	**83,186,939**
18	**ஏனைய செலவினங்கள்**		
	விற்ற சொத்துக்களில் நட்டம்	15,360	416,885
	வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தில் நட்டங்கள்	206	-
	வெளிநாட்டு நாணய கணக்கில் பிடித்து வைத்த வரி	38	-
		15,604	**416,885**

டீஇசி/பி/எஸ்எல்ஐசீ/19/1/43 2020 செப்டெம்பர் 09

ஆணையாளர்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை *பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு* இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் ரூபாய் 58,000,000 பெறுமதியுடைய மானியமானது, புத்தாக்கங்களினை மேம்படுத்துவதற்கான செலவினம் என்றவகையில் வழங்கப்பட்ட போதிலும், வருடகாலப்பகுதியில் இந்த மேம்படுத்துகை தொடர்பில் செலவிடப்பட்ட ரூபாய் 69,430,417 இனை பதிவு செய்ததன் பெறுபேறாகவும் அத்துடன் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டு தொகையினைவிட மேலதிகமாக இருந்ததினாலும் கணக்கீடு தவறாக செய்யப்பட்டதாலும் நிதியியல் கூற்றுக்களில் மூலதன மானிய கணக்கானது ரூபாய் 3,842,091 மறை எண்களினை காட்டியது என்பதுடன், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் ரூபாய் 11,430,417 நட்டத்தினை காட்டியது. இந்த மொத்த சீராக்கங்களின் பெறுபேறு, மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் டிசம்பர் 31 இல் உள்ளவாறாக நோக்கின், ஆணைக்குழுவின் தேறிய சொத்துக்கள் ரூபாய் 76,390 மறை எண்களாக உள்ளன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

- கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகளாவன, 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் 19 இன் பிரிவு 12 (அ) பிரகாரம் ஆணைக்குழுவினால் பேணப்பட்டிருந்தன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(III) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(IV) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு கீழே குறிப்பிடப்படுகின்ற எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(இ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் ஆளுனர் சபை உறுப்பினர் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாகவும்

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(உ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம் அல்லது நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாகவும்

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளது

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தியிருக்கவில்லை எனவும்

03. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) புத்தாக்குனர்களினை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கடன் என்ற அடிப்படையில் 2019 ஆகஸ்ட் வரையும் 16 புத்தாக்குனர்களுக்கு ரூபாய் 23,530,000 மானியம் வழங்குவதற்கு முன்மொழிவு செய்யப்பட்டபோதிலும், 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி வரையிலும் இதற்கு தேவைப்படும் கருவியினை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளினை பூரணப்படுத்துவதற்கு ஆணைக்குழு எதுவித நடவடிக்கைகளினையும் எடுக்கவில்லை.

(ஆ) போட்டிகளினை பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துதல், போட்டிகளினை நடாத்துதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களினை இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்துடன் இணைந்து ஒழுங்கமைப்பு செய்யவும் அவற்றினை தேயிலை கைத்தொழிற்துறையுடன் தொடர்புடைய தனியார் நிறுவனங்களினை உள்ளடக்கிய நடுவர் குழாமினால் மதிப்பீடு செய்வதற்குமான அனுமதியினை பணிப்பாளர் சபை வழங்கியுள்ளது. எவ்வாறாயினும், இடைநிலை மட்டத்து தேயிலை வளர்ப்பாளர்களினால் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளினை தீர்ப்பதற்கு இக்கருத்திட்டங்கள் இனம் காணப்பட்டபோதிலும் அவை 2020 பெப்ரவரி இறுதியிலும் கூட அமுல்படுத்துகை செய்யப்படவில்லை.

(இ) வரவு செலவு திட்ட முன்மொழிவுகளுக்கு அமைவுற, இலங்கை புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளினை தொழில்நுட்ப அடைகாப்பக நிலையங்களினை தாபிப்பதனூடாக, வழங்குதல் வேண்டும் என்ற பணியானது, ஆணைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததோடு இந்த அடைக்காப்பக நிலையங்களினை தாபிப்பதற்கு ரூபாய் 51.2 மில்லியன் மானியம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரஜரட்ட மற்றும் ருகுணு பல்கலைக்கழகங்களுடன் கூட்டிணைந்து திட்டமிடப்பட்டவாறு முன்மொழிவு செய்யப்பட்ட இந்த செயற்பாடானது அமுல்படுத்துகை செய்யப்படவில்லை.

டபிள்யூ.பி.சி. விக்கிரமரட்ன
கணக்காய்வாளர் நாயகம்.